**O.S. No.194/2018**

**Deposition of P.W. 1**

**Dated : 02.06.2026**

**Name : திரு.மனோகர செல்வன்**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் விவசாயம் செய்து வருகிறேன். 2 ஏக்கர் 59 செண்ட் நிலத்தை யார் யாருக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 2 ஏக்கர் 59 செண்ட் சம்பந்தமாக பிராமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் படி எவ்வளவு நிலம் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் 64 3/4 செண்ட் நிலம். வா.சா.ஆ.1 ன் படி 2 பிளாட்டுகள் கிரையம் கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.1 ல் வடக்கிலிருந்து தெற்கில் 7 வது பங்கு 1 ற்கு 32 அரைக்கால் செண்ட் சேர்ந்த 2 பங்குகளுக்கு 64 3/4 புரையிடங்களும் அவைகளுக்குட்பட்ட விருட்சங்களும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 7 வது பிளாட்டிற்கு உண்டான சொத்து மேற்சொன்ன சொத்து என்றால் 8 வது பிளாட்டுகளில் எந்த பிளாட் வாங்கினோம் என்றால் 3 மற்றும் 4 பிளாட்டுகள் என் தந்தையார் கிரையம் வாங்கினார். 3 மற்றும் 4 பிளாட்டுகள் மொத்தம் 64 3/4 செண்ட் நிலம் ஆகும். 64 3/4 செண்டில் எந்த பக்கத்தில் உள்ள நிலத்தை தந்தையார் வாங்கினார் என்றால் சரியாக தெரியாது. 2 வது பிரதிவாதிக்கு வழக்கு சொத்திற்கு பட்டா எந்த ஆண்டிலிருந்து உள்ளது என்றால் 2013 முதல் போலியாக உள்ளது. நான் எவ்வளவு செண்ட் விலைக்கு கொடுத்தேன் என்றால் 22 செண்ட் . அந்த 22

செண்ட் நிலங்கள் குறித்த ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.4 ன் படி கிரையம் கொடுத்த நிலமான 55.575 செண்ட் நிலத்தில் 8 செண்ட் நிலம் கிரையம் கொடுத்ததற்கு 55.575 செண்ட் என் கைவசம் இருந்ததா என்றால் என் வசம் இருந்தது. வா.சா.ஆ. 5 முதல் 7 ஆவணங்களில் மேற்சொன்னபடி 55.575 செண்ட் நிலத்தில் தான் கிரையம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 55.575 செண்ட் நிலம் என்னுடைய அனுபவத்தில் இருந்ததற்கு வேறு அரசு ஆவணங்கள் தாக்கல் செய்யமுடியுமா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையரிடம் ஆவணப்படி உள்ள 38 3/4 செண்டும் கைவசம் இருப்பதாக கூறும் 55.575 செண்ட் ஐயும் எந்த இடத்தில் வருகிறது என்பது குறித்து நீதிமன்ற ஆணையரிடம் குறிப்பிட சொன்னேனா என்றால் சொன்னேன். 16 3/4 செண்ட் நிலம் 38 3/4 செண்ட் நிலத்திற்குள் அல்லது கைவசம் உள்ள கூடுதல் நிலத்திற்குள் வருமா என்றால் 38 3/4 செண்ட் நிலத்திற்குள் வரும். 16 3/4 செண்ட் தவிர மற்ற சொத்துக்கள் யார் சொத்துக்கள் என்றால் கிரையம் கொடுத்த நபரிடம் உள்ளது. 16 3/4 செண்ட் நிலத்தின் எல்லை கிழக்கு மற்றும் தெற்கு விவேகானந்தா கேந்திரா மேற்கு புறம் வினாயகமூர்த்தியின் சொத்து மற்றும் பாதை, வடக்குபுறம் 2ம் பிரதிவாதியின் தாயார் ஆறுமுகம் அம்மாள் சொத்தும் உள்ளது. வழக்கு சொத்து தொடர்பாக வேறு ஒரு வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ன்படி பத்தி 9ல் வா.சா.ஆ.8 லிருந்து 17 வரையிலான ஆவணங்களில் இருந்து பட்டிகை சொத்து ஆறுமுகம் பெயரில் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ன்படி பத்தி 10ல் பி.வா.சா.ஆ.2ல் புதிய ச.எண்.621/15

மையினால் எழுதப்பட்டுள்ளது என்றும் அதனால் அந்த சொத்து வாதிக்கு சொந்தமானது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தில் பிரதிவாதிகளுக்கு உரிமை இல்லை, ச.எண்.621/14 ல் தான் உரிமை உள்ளது. ச.எண்.621/14 ல் தான் உரிமை உள்ளது என இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.1186/1988 வழக்கில் நான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ன் படி பத்தி 10 ல் புதிய ச.எண்.621/15 க்கு தனியாக கரம் தீர்த்த ரசீது ஆஜர் செய்யவில்லை என்றும் வாதி விலைக்கு வாங்கிய பின்பு தான் பிரதிவாதியின் தந்தை விலைக்கு வாங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் எதிரிடை அனுபவம் கோரியுள்ளேன் என்றும் நிவாரணம் வழங்கப்படவில்லை என்றால் பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேல்முறையீடு தள்ளுபடி உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். கிரைய ஆவணங்களுக்கு எதிராக ஏமாற்றி கிரையம் கொடுத்ததாக என்மீது காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த புகார் கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்தது தொடர்பான புகார் என்றால் இல்லை. வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் ஆக்கிரமிப்பு இடத்தை மீட்டு தரக்கோரி தாக்கல் செய்துள்ளேன். எந்த இடம் ஆக்கிரமிப்பு

செய்யப்பட்டுள்ளது என்றால் 16 3/4 செண்ட் நிலம் ஆகும். எப்போது ஆக்கிரமிக்கப்பட்டது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. ஆறுமுகம் அம்மாள் குடும்பத்தாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது. நீ.ம.சா.ஆ.2 ல் உள்ள வரைபடத்தில் உள்ள R.S.No.621/15 என கோடிட்டபகுதி யாருடைய இடம் என்றால் என்னுடைய இடம் ஆகும். R.S.No.621/14 அவர்களுடைய இடம் ஆகும். R.S.No.621/15 என குறிப்பிடப்பட்ட இடம் யாருடைய கைவசம் உள்ளது என்றால் என் கைவசம் இல்லை. ஆறுமுகத்தம்மாள் என்பவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 ல் பத்தி 12 ல் புதிய ச.எண்.621/14 லும் ச.எண்.621/15 லும் வாதிக்கு சொத்துக்கள் உள்ளது என நிரூபிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு 38 3/4 செண்ட் தவிர கூடுதல் அனுபவம் இல்லை என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 முதல் 8 வரை ஆவணங்கள் போலியான ஆவணங்கள் என்றும் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே உள்ள வழக்கில் பிரதிவாதிகளுக்கு சாதகமாக விளம்புகை பரிகாரம் மற்றும் அனுபவம் அவகாசமும் வழங்கி தீர்ப்பாகப்பட்டது எனவே 2 வது வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்தீர்ப்பு தடை என வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காலம் கடந்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ன்படி தீர்ப்பாகியுள்ளதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பொய்யான காரணம் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3 , 4 பிளாட்டுகள் என் தந்தையார் கிரையம்

வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றல் சரியல்ல. என் தந்தையார் வாரிசுகள் அனைவரையும் வழக்கில் சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் தந்தையார் சொத்தை எனக்கு கொடுத்ததற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் ஒரே மகன் என்பதால் எனக்கு கொடுத்தார். அகிலா, கலைமதி என்னுடைய சகோதரிகள். வாதிகள் கைவசம் தான் வழக்கு சொத்து உள்ளது என்றும், அதனால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 6.1.1968 கிரைய ஆவணம் தேதியிலிருந்தே வழக்கு சொத்துக்கள் பிரதிவாதிகள் கைவசம் உள்ளது என்றால் சரியல்ல. 621/15 பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என் பிராது மற்றும் பிராமாண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் நான் சொத்தை விலைக்கு கொடுத்துவிட்டேன் அதனால் தெரியாது. தற்போது உள்ள பட்டா எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. கிரையம் கொடுத்த சொத்து எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் தெரியாது. புல எண்.621/15 சொத்திற்கு என்னுடைய பெயர் பட்டாவில் எப்போதுசேர்க்கப்பட்டது என்றால் என் அப்பா பெயரில் உள்ளது. என் பெயர் சேர்க்கப்படவில்லை. பிரதிவாதிகள் பெயர் பட்டாவில் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. பட்டாவில் பிரதிவாதிகள் பெயரை நீக்குவதற்கு எந்த நடவடிக்கை எடுத்தேனா என்றால் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்தேன். அதில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எப்போது புகார் அளித்தேன் என்றால் ஞாபகம் இல்லை. பொய்யான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளதால் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.